1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No. 347/2024

2025வது ஆண்டு ஜனவரி மாதம் 08ம் நாள் வா.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 வது விதியின் 9வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.காவேரி உடையார்( கிராம நிர்வாக அலுவலர் சிவந்திப்பட்டி) | வட்டம் | |
| க.பெ /த.பெ | திரு.கந்தவேல் | கிராமம் | |
| வயது | 32 | மதம் | |

08.01.2025 <u>முதல் விசாரணை</u>

நான் சிவந்திப்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். இந்நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்ரவேல் என்பவரின் வாரிசுகள் பற்றி விசாரணை செய்தேன். மேற்படி இஸ்ரவேல் என்பவர் கிருஸ்துவ மதத்தை சார்ந்தவர். இஸ்ரவேல் என்பவருக்கு 2 மனைவிகள். அவரது முதல் மனைவி பெயர் பாலாமணி.பாலாமணிக்கும் இஸ்ரவேலுக்கும் சம்பூரணம் என்ற ஒரே மகள். மேற்படி பாலாமணிக்கும் இஸ்ரவேலுக்கும் விவாகரத்து எதுவும் நடக்கவில்லை. பாலாமணி உயிரோடு இருக்கும்போதே இஸரவேல் தங்கமரியாள் என்பவரை 2வது திருமணம் செய்துக்கொண்டார். தற்போது பாலாமணி நலமாகத்தான் உள்ளார். இஸ்ரவேலின் 2வது மனைவியான தங்கமரியாள் 26.06.2009ல் இறந்துவிட்டாள். தங்கமரியாளுக்கும் இஸ்ரவேலுக்கும் குழந்தைகள் இல்லை. இஸ்ரவேலின் பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள். பாலாமணி என்பவர் இஸ்ரவேலை பிரிந்து வேறு ஒருவரை திருமணம் செய்துக்கொண்டு பொட்டல் கிராமத்தில் வசிக்கிறார்.

குறுக்கு விசாரணை இல்லை